# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)


ஒருசிலர் உண்டு களித்திருப்பதற்காகத்தான் உலகில் உண்டாக்கப் பட்டார்கள் என்றால், கடவுள் அவர்களுக்கு உடலில் வாயையும் வயிற்றையும் மாத்திரமே படைத்திருப்பார்.

— ஆபிரகாம் லிங்கன்


95-ம் புத். | 1970-ம் ஆண்டு புரட்டாதிமாதம் 19-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 35-ம் இல.


## மனிலாவில் நடக்க இருக்கும் ஆசிய மேற்றிராணிமாரின் மகாநாடு

இவ்வருட இறுதியில் ஆசியமேற்றிராணிமார் பிலிப்பைன்தேச மனிலா நகரில் ஒன்றுகூடி ஆசிய பிராந்தியத்தில் திருச்சபையின் கருமங்களைப் பற்றி ஆராய இருப்பதையும் இமமகாநாட்டில் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் பங்குபெற இருப்பதையும் யாவரும் அறிவர். ஆலோசிக்கப்பட இருக்கும் கருமங்கள் திருச்சபையின் வேலையுடன் தொடர்புகொண்ட சமூக, சமய, அரசியல் பிரிவுகளாக அடக்கப்பட்டிருக்கின்றன. மகாநாட்டின நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பதற்கு ஏற்கனவே அதற்கென நியமிக்கப்பட்ட நிர்வாக குழு மனிலாநகரில் கூடித் தமது அலுவலை முடித்துவிட்டது. ஆசியபிரச்சினைகளைப்பற்றி ஆலோசனைகளை நடத்துவதற்கு உதவியாக 7மேற்றிராணிமார் ஆரம்ப உரைகள் நிகழ்த்துவதற்கும் குறிக்கப்பட்டிருக்கின்றனர். மகாநாட்டின்போது பரிசுத்த தந்தையின் திருக்கரங்களினால் ஆசியாவின் பல மேற்றிராசனங்களிலுமிருந்து பலர் குருமாராக அபிஷேகம் செய்யப்பட இருக்கின்றனர். அவர்களுள் இலங்கையரும் சிலராவர்.

### நூறுவயதான கன்னியாஸ்திரி

நூறுவயது நிரம்பிய ஆங்கில கன்னியாஸ்திரி சிஸ்றர் சேவியர் தமது 100-ம் ஆண்டுச் சிவியம் மிகக் குதூகலமாக இருக்கின்றது எனக் கூறினார். நூறாண்டு நிறைந்தவராயினும், 75வயதுடையவர் போலவே தோற்றம் அளிக்கின்றார். நூறாண்டுகளும் மிகவிரைவாகக் கழிந்துவிட்டதென்பது அவரது எண்ணம். "கன்னியாஸ்திரியான நாள் நேற்றுப்போல் அண்மையாகத் தோற்றுகின்றது" என அவ அவரைக்காணப்போன பத்திரிகை நிருபர்களுக்குக் கூறினார். 82வருடகாலமாகக் கன்னியாஸ்திரி வாழ்வைச் சந்தோஷத்துடன் நடத்தியுள்ளார். புனித அன்ட்றுவின் சபையில் சேர்ந்த இவர் இச்சபையின் தலைவராகக் கடமையாற்றி உலகின் பலபாகங்களுக்கும் சென்றிருக்கின்றார்.

## திருச்சபையில் குழப்பங்கள்

"திருச்சபையில் குழப்பங்கள் ஏற்படுவதை நாம் எதிர்பார்க்க வேண்டும். ஆனால், இந்தக் குழப்பங்களினால் திருச்சபையின் போதனைகள் தமக்குச் சுபாவத்திலே உள்ள ஒளியை இழந்துவிடக் கூடாது. எந்தக் குழப்பங்கள் ஏற்பட்டபொழுதிலும் திருச்சபை இறுதியில் முன்னிலும் கூடிய பலத்துடனும், அதிகாரத்துடனும் விளங்குமென்பது திண்ணம்."

இவ்வாறு அமெரிக்க அதிமேற்றிராணியாராகிய நீக்கலஸ் எல்கோ அடிகளார் அமெரிக்க சமூகத்தினரின் வைபவம் ஒன்றில் எடுத்துக் கூறினார். திருச்சபைக்குச்சமீபகாலத்தில்ஐக்கிய அமெரிக்க தேசத்தில்தோன்றியிருக்கும் எதிர்ப்பைப்பற்றிக் குறிப்பிடுகையில், "53 வருடகாலமாக ருஷியாதேசத்திலுள்ள கடும் எதிர்ப்பையும் இறுதியில் திருச்சபை வென்றுவிட்டதானால் சனநாயகம் மிளிரும் அமெரிக்காவில் தோன்றியிருக்கும் எதிர்ப்பைப்பற்றி நாம் அஞ்சவேண்டிய அவசரமில்லை" என்றார்.

### செல்வந்தர்களையே நாம் நாடுவது பிழை

சென்றவாரம் இந்தியாவில் நடைபெற்ற யேசுசபைச் சந்நியாசிகளின் மகாநாட்டில், இந்திய நாட்டில் யேசுசபைக் குருமார் செய்துவரும் சேவையை ஆராயுங்கால் அவர்கள் இந்தியநாட்டு வறியவர்களின் நன்மைக்கு வேலை செய்வதிலும் பன்மடங்கு கூடியவிதத்தில் செல்வந்தரின் நன்மைக்காகவே சேவைசெய்து வருகின்றனர் என எடுத்துக் காட்டப்பட்டது. ஆகவே, வருகிற வருடம் இந்தியநாட்டில் யேசுசபைச் சந்நியாசிகள் சேவை செய்துவரும் சகல கல்வி ஸ்தாபனங்கள் யாவற்றிலும் நிலைமையை நன்கு ஆராய்ந்து வறியவர் சேவையில் தம்மைப் பெரும்பாலும் அர்ப்பணிக்க அச்சபைச் சந்நியாசிகள் கேட்கப்பட்டிருக்கின்றனர்.

## உலக சமாதானத்துக்கு இரு நல்ல அறிகுறிகள்

உலகசமாதானம் நிலைபெறக்கூடிய இரு சம்பவங்கள் அண்மையில் நடந்தேறியது மகிழ்ச்சிக்குரிதே. ஒன்று முதலாளித்துவம் அதிகாரத்திலிருக்கும் மேற்கு ஜேர்மனிக்கும் கொமியூனிஸ்துவ உலகுக்கு தலைமை வகிக்கும் ருஷியாவுக்குமிடையில் ஏற்பட்டுள்ள ஒப்பந்தம். இம்மாதம் 12-ம்திகதி மேற்கு ஜேர்மனியின் தலைவராகிய சான்செலர் வில்லிபிருன்ற் மொஸ்கோ சென்று ருஷியபிரதமராகிய தலைவர் கோசிஜன் என்பவருடன் ஓர் அரசியல் ஒப்பந்தம் செய்துகொண்டார். இருநாடுகளும் தங்கள் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ள யுத்தத்தில் இறங்கோம் என்றும் தற்போதுள்ள தேசஎல்லைகளை மதித்து நடப்போமென்றும் வாக்குறுதி அளித்திருக்கின்றன. இந்த ஒப்பந்தம் உலக சமாதானத்துக்கு உண்மையாகவே வழிகோலியிருக்கின்றது என அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகள் வரவேற்கின்றன — அதே காலத்தில் ருஷியாவுக்கும், அமெரிக்காவுக்கும் உள்ள உறவு சற்றுத்திருத்தமடைந்திருப்பதால் மத்திய கிழக்கு உலகில் அரபுநாடுகளுக்கும் இஸ்ரேயல தேசத்துக்குமிடையில் நிரந்தர சமாதான பேச்சுக்களுக்கு வழிகோலத்தக்கதாய் ஐக்கிய அமெரிக்கா இட்டதிட்டத்தை போரில் ஈடுபட்டிருக்கும் இருபகுதிகளும் ஏற்றுக்கொண்டு, ஆரம்பகட்டமாக 90நாட்களுக்கு யுத்த முயற்சிகளையும் செயல்களையும் நிறுத்திக்கொள்ளத் தொடங்கியிருக்கின்றன. இவ்விரு வழிகளும் பயன்தந்து நிரந்தர சமாதானம் உலகில் நிலைகொள்ளத் தேவனைப் பிரார்த்திப்போமாக.

## வால்ஷ் அடிகளார் அமெரிக்கா சேர்ந்தார்

12வருடகாலமாக சீனதேச சிறையில் காலங்கழித்து, அண்மையில் விடுதலைபெற்று, ஹொங்கோங்நகரில் சற்றுசுகம் பெற்றதன்பின், ஒருகாலம் ஷாங்காய்நகர மேற்றிராணியாராயிருந்த ஐக்கிய அமெரிக்க தேச இனத்தவரான வால்ஷ் அடிகளார் தமது ஜனனதேசத்தைச் சேர்ந்துவிட்டார். அமெரிக்கா செல்வதன்முன், வத்திக்கான் சென்று, பாப்பரசரைத் தரிசித்து ஆறுதல் பெற்றுக்கொண்டார். அமெரிக்காசேர்ந்ததும் அவருக்கு ஒரு மகா வீரனுக்குரியவரவேற்பு அளிக்கப்பட்டது. அவ்வரவேற்பில் ஐக்கிய அமெரிக்க தேச திருச்சபையும், ஐக்கிய அமெரிக்கதேச அரசாங்கமும் ஒன்றுசேர்ந்து கொண்டன. சுருக்கமான வரவேற்பின்பின் வால்ஷ் அடிகளார்நியூயோர்க் நகரில் சற்றுத் தூரத்திலிருக்கும் சுகஸ்தலத்துக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கிறார்.

### பிரபல படப்பிடிப்பாளர்

ரோமைநகரிலே பிரதிமைப்படங்கள் பிடிப்பதில் கைதேர்ந்தவரான திரு. லெஸ்லி பிறீஸ்ற் அவர்கள் கடைசியான மூன்று பாப்பரசர்களினதும் மகுடதாரண வைபவங்களைப் படம்பிடித்துப் பிரசித்தி பெற்றிருக்கிறார். இவர் 48 அங்குல லென்ஸ்கள் கொண்ட "பிக்பேர்த்தா" என்ற கமராவை இதற்குப் பயன்படுத்தினார். இது முற்றும் தூரமான காட்சிகளைச் சமீபத்தில்கொண்டுவந்து காண்பிக்கும் சக்திவாய்ந்தது.

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

## பாப்பரசரின் இலங்கைவிஜயம்

அண்மையில் கொழும்பில் நடந்த இலங்கைமேற்றிராணிமார் சங்ககூட்டத்தின்பின் வெளிவந்த அறிக்கையின்படி, பரிசுத்ததந்தை பிலிப்பையின் தேச மனிலா நகரத்துக்கும் அதன்பின் அவுஸ்திரேலியா கண்டத்துக்கும் இவ்வருட இறுதியில் போகும் வழியில் இலங்கையிலும் தங்கவேண்டுமெனும் வேண்டுகோள் அரசாங்கத்தினிடமிருந்தும், கத்தோலிக்க மக்களின்சார்பாக கருதினல் கூறேயினிடமிருந்தும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வேண்டுகோளுக்குப் பாப்பரசரிடமிருந்து பதில் விரைவாக எதிர்பார்க்கப்படுகின்றது, ஏற்கனவே மனிலா, சிட்னி நிகழ்ச்சிகளுக்குத் தினம் குறிக்கப்பட்டுவிட்டபடியால் இலங்கையிற் தங்கும் நேரத்தையோ, நாட்களையோ குறிப்பதில் வத்திக்கானுக்குச் சற்றுக் கஷ்டம் ஏற்படலாம். சில சமயம் அவுஸ்திரேலியாவிலிருந்து திரும்பும்போதே பரிசுத்ததந்தை இலங்கைக்கு விஜயம்செய்ய நேரிடலாமெனவும் கூறப்படுகின்றது.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாலிபர் உலகம் வளம்பெற வேண்டுமானால்......?

நாம் புரட்சியுகத்தில்வாழ்ந்து வருகின்றோம. சட்டமும், ஒழுங்கும் அவமதிக்கப்படுகின்றன. சட்டத்தை அனுசரிப்பவர்கள் மிகச்சிலரே. ஒழுக்கவாழ்வு வாழ்பவர்கள் ஒருசிலரே. எங்கு நோக்கினும் புரட்சி. புரட்சிச்சித்தாந்தம் கரைபுரண்டோடும் காலம் இது. நாடுகளில் எல்லாம் கட்டவிழ்த்துவிடப்பட்ட ஒழுங்கீனம், சட்டமறுப்பு, ஆயுதப்புரட்சி, ஆட்சியைக் கவிழ்த்தல் என்பன தலைதூக்கி குழப்பமும் கொந்தளிப்பும் குமமாளமடிக்கின்றது. அமைதி இல்லை; நியாயம் இல்லை. நீதிகிடையாது... இதுதான் இன்றைய இருபதாம் நூற்றுண்டின் முற்போக்குப்பாதை; நாஸ்திகத்தின் நாசப்பாதை.

இளைஞர் மிகமோசமான போக்கிலே போய்க்கொண்டிருக்கிறார்கள். ஒரு அவலநிலை. கண்மூடித்தனமான யதார்த்தமற்ற வெறியாட்டம் பயங்கரரூபத்தில் தாண்டவமாடுகின்றது. மேற்கு நாடுகளிலும்சரி; சமயமும், சன்மார்க்கமும், சாந்திவழியும், காந்திவழியும் கண்ட கிழக்கு நாடுகளிலுஞ்சரி இப்பேயாட்டம் உச்சநிலையில் இருக்கின்றது. அளவுக்கு மிஞ்சிய, அறிவிலுக்கு அப்பாற்பட்ட கீழ்த்தரமான, மிகமட்டரகமான வாழ்க்கைவழிகளில் கட்டுண்டு அங்கலாய்க்கிறார்கள் நவயுக இளைஞர்கள். பெரியோருக்கு மதிப்பு இல்லை. பாரம்பரியத்துக்கு மதிப்பு இல்லை. சட்டத்துக்கு மதிப்பு இல்லை. ஒழுங்குக்கு கட்டுப்பாடு இல்லை. கண்ணியம் கிடையாது. தம்மை ஆளாக்கிய ஆசிரியருக்கே மதிப்புக்கொடுப்பது கிடையாது. ஈன்று வளர்த்து உருவாக்கிவிட்ட பெற்றோரையாவது கனம்பண்ணுகிறார்களா? இதுதான் 50வயதை எட்டிப்பிடித்துக் கொண்டிருக்கும் நடுத்தரவயதினருக்கும், பேரப்பிள்ளை கண்ட 60, 70 வயதுகண்ட முதியவர்களுக்கும், கவலை தரும் கசப்பான உண்மை— நிதர்சனமாகக்கண்டு இதயம் சோர்கிறார்கள். என்னசெய்யலாம என்று ஏங்குகின்றனர்.

யுவர்கள்உலகம் புரட்சிமுனையில் புகுந்துவிட்டது. எந்த நாட்டிலும அவர்களே புரட்சிக்குக் காரணமாயிருக்கின்றனர். பிரான்சிலே ஜனாதிபதியுகால் வீழ்ச்சிக்குக் காரணம் யார்? ஈழத்தில் முன்னுள் ஆட்சியாளரின் படுதோல்விக்கு காரணம் யார்? ஒலிம்பிக் சர்வதேச விளையாட்டுகளின் ஆரம்பதினங்களுக்கு முன் மெக்சிக்கோவில் உள்நாட்டு யுத்தநிலைமை தோற்றக் காரணம் யார்? அமெரிக்க எதிர்ப்பு; வியட்நாம் யுத்தஎதிர்ப்பு ஆர்ப்பாட்ட அணிவகுப்புகளை பிரிட்டனில் நடத்தியவர்கள் யார்? இளைஞர் சமுதாயமே. இத்தாலி, பிரான்ஸ், பிலிப்பைன் தீவுகள், இந்தோனேஷியா, அமெரிக்கா ஈழம் உட்பட அநேகநாடுகளில் மாணவர் குழப்பங்கள் இடம்பெறவில்லையா? பலாத்காரம், சட்டத்தை துஷ்பிரயோகம் செய்தல், பலவந்தம ஆயுதப்பிரயோகம், சட்ட மீறல்களில் சர்வகலாசாலை, மாணவர்களே ஈடுபடவில்லையா? நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்க வேண்டிய இளைஞர்கள்; எதிர்காலத்தில் நாட்டுக்கும், வீட்டுக்கும் தலைமை தாங்க வேண்டியவர்கள்; ஒரு நாட்டின் எதிர்கால மன்னர்கள்; சட்டத்தை அவமதித்து, கட்டுப்பாட்டை இழிவுசெய்து கண்ணியம் தவறி, நீதியும் நெறிமுறையும்கடந்து, கட்டுக்கோப்பான ஒழுக்க முறைகளை அலட்சியம் செய்து மிருகவெறி தலைக்கேறி, சுயாதீனத்தையும், சுதந்தரத்தையும் தப்பாகப்புரிந்து கொண்டு கட்டவிழ்க்கப்பட்ட காடைத்தனத்தில் மனஅமைதி பெற்று வாழும்போது உத்தமர்கள் என்ன செய்யலாம்? கல்விமான்கள் யாது செய்யலாம்? ஆட்சியாளரால்தான் என்ன செய்யமுடியும்?

ஒழுக்கக் கேடான கவலை தரும் செய்திகளே இன்றைய பத்திரிகைகளில் பக்கங்களை நிரப்புகின்றன. பிரபலகுடும்பத்துப் பிள்ளைகளே களவு, கொள்ளை, வழிப்பறிகளில் சம்பந்தப்படுகிறார்கள். கற்பழிப்பு, களவொழுக்கம், விபசாரம், வெட்கங்கெட்ட நடத்தை இவை இளைஞருக்கு அமுதுபோன்ற செயல்களாயிருக்கின்றன. நஞ்சு குடித்துச்சாவு, கிணற்றில விழுந்து சாவு, றெயில்முன் பாய்ந்து கொலை இப்படி எத்தனையோ செய்திகள். இவை யாவும் 13வயது தொடக்கம் 19வயது வரையுமுள்ள யுவதிகளும், யுவர்களும் ஈடுபடும் சம்பவங்களாகும்.

இவற்றுக்கு அடிப்படையான காரணம் பிள்ளைகள் சமயநெறியில் பாலப்பருவத்தில் இருந்தே பயிற்றப்படாததேயாம். பெற்றோரின் பாராக்கண்டிதமும் அசட்டையும் பிழையான வளர்ப்பும், பாராமரிப்புமே காரணம் என்றால் அது மிகையாகாது. கண்டிப்பு அற்றவளர்ப்பு நன்மூன்மாதிரிகை அற்ற வாழ்க்கை, சமயப்பற்று, கடவுட்பயம், பிறர்சினேகமற்றபோக்கு— சுருங்கச் சொன்னால் பெற்றோர் அளிக்கும் பாலியவயதுப் பயிற்சியே வாலிபருக்கு எதிர்காலத்தைச் சிதைக்கும் கருவியாகும். கடவுள் பழையேற்பாட்டிலும், புதியேற்பாட்டிலும நற்செய்தி ஏடுகளிலே காட்டிய வழியில் பெற்றோரும், பிள்ளைகளும் ஒழுகிவரின் இன்றைய சீர்கேடுகள் எவ்வளவோ குறையும. சன்மார்க்கம், சத்தியம் சீருடன் விளங்கும்.

மேலே குறிப்பிட்ட வேதவாக்குகள் ஒழுக்கத்தின் கற்பனைகளாக, அறிவுரைகளாக விளங்குகின்றன. பிள்ளைகளுக்கு பெற்றோர்மட்டில் சுமத்தப்பட்டுள்ள கடமையைத் தெற்றெனக்காட்டுகின்றன. தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டும் என்றாற்போல அமைதல், அல்லது பணிதல் என்னும் உயர்பண்பு வீட்டிலேயே பயிற்றப்படவேண்டியது. பயிலவேண்டிய பள்ளிப் பருவத்தில் இவை பெற்றோரால பயிற்றப்படவேண்டும. வீட்டிலபயில்வதே நாட்டிலும் துலங்கும்.

இளைஞர் உணர்ச்சிகளுக்கு அடிமைப்படுவதாலேயே இன்று உலகெங்கும் புரட்சியும் குழப்பமும் உண்டாகின்றது; பயங்கர நிலைமைகள் ஏற்படுகின்றன. உணர்ச்சிவசப்படுபவர் தன்னையே மறந்துவிடுகிறார். உணர்ச்சிக்கு ஆளாவதைவிட ஆறஅமர ஒரு விடயத்தை அலசி ஆராய்ந்து உணர்ந்து செயல்படுவதே மேல். ஆழமாகச் சிந்திக்காமல் மேலாட்டமான தளம்பும் அறிவுடன் காரியமற்ற குதர்க்கம்பேசுகிறார்கள் இளைஞர்கள். நிறைகுடம்தளம்பாது. என்பதைப்போல் நிறை அறிவுடையவர் அனாவசியமாக கிளர்ந்தெழமாட்டார். குறைகாணுவதே தமது அலுவலாய் இருப்பவர்களும், தன்குறையை உற்றுணராதவரும், சிந்தித்துச் செயல்ஆற்றாதவரும் சினந்துசெயலில் இறங்கிச் சீர்கேடுகளை உண்டாக்குகிறார்கள்.

"ஒழுக்கம் விழுப்பந்தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

என்ற வள்ளுவன் வாய்மொழிக்கிணங்க வாழமுனைந்தால் வாலிப உலகம வளம்பெறும். அடக்கமும், அமைச்சலும், பணிவும், சிந்தனையில் தெளிவும், உணர்ந்து செயல்படும் பணபும், பெரியோருக்கு மதிப்பும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் ஒருங்கே சேரின் பெரியோரும் இளைஞரை மதிப்பர். மதிப்பைக் கொடுப்பதன்மூலமே மதிப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். எந்த நாட்டிலும் சகஜநிலையும் அமைதியும் நல்லாட்சியும் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவ வாலிபர் சமுதாயம் சிறந்த அடிப்படையில் அவர்கள் இளமைப்பருவத்திலேயே. பயிற்றப்பட வேண்டும். உறுதியான அத்திவாரத்தில் கட்டப்பட்ட கட்டடம் நிமிர்ந்து உறுதியாய் கம்பீரமாய் நிற்குமன்றோ.

எஸ். எம். ஜே.

## பிள்ளைகளுக்கு

1. "உன்தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கப்படுகிற பூமியிலே நீ நெடுநாள் சீவிக்கும் பொருட்டு உன்தந்தையையும் தாயையும் சங்கித்திருப்பாயாக" (4-ம் கற்பனை யாத்திரை: 20 : 12)
2. "ஞானமுள்ள மகன் தன்தந்தையின் புத்திமதியைக் கேட்கிறான், (செவிகொடுத்து) அதன்படி நடக்கிறான். ஏளனக்காரனோ கண்டிக்கப்படுகையில் செவிகொடான்" (பழமொழி 13 : 1)
3. "மடையனும் மதிகேடனும் தன் தந்தையின் கண்டனங்களை நகைத்து இழிவு செய்வான். ஆனால் கண்டனங்களை ஏற்பவன் மிக விவேகியாவான்" (பழமொழி 15 : 5)
4. "என்மகனே, உன்தந்தையின் அறிவுரைகளைக்கேள். உன்மாதாவின் கட்டளையைக் கைவிடாதே, அது உன்சிரசுக்கு அழகும், கழுத்துக்குப் பொலிவுந்தரும் சங்கிலியைப்போலிருக்கும்." (பழமொழி 1 : 8, 9)
5. "சொல்லாலும், செயலாலும், பொறுமைக்குணத்தாலும் உன்தந்தைக்குச் சங்கைசெய். அதனால் அவருடைய ஆசீர்வாதம் கிடைக்கும். அவருடைய ஆசீர்வாதமும் உன் சீவியகாலம் வரைக்கும் உன்னோடிருக்கும்." (சர்வப்பிரசங்கி : 3 : 9, 10)
6. "மகனே உன்தந்தையின் வயோதிபத்தில் அவரை ஆதரி; அவருடைய சீவியகாலத்தில் அவரை மனம்நோகச் செய்யாதே; அவரது அறிவு குறைந்ததேயானால் அவரை மன்னித்துக்கொள்; உன்விவேகத்தில் அவரை நிந்தியாதே; ஏனெனில் தந்தைக்குக் காண்பிக்கப்படும் இரக்கம் ஒருபோதும் மறக்கப்படமாட்டாது; ஏனெனில் நீதியில் நிலைநாட்டப்படுவாய். உன் துன்பநாட்களில் நீயும் ஆதரிக்கப்படுவாய், பரிதிமுன் பனிபோல உன்பாவங்களும் கரைந்துபோகும்." (சர்வப்பிரசங்கி 3 : 14—17)
7. "பிள்ளைகளே உங்கள் தந்தையின் புத்திமதிகளைக்கேட்டு நீங்கள் இரட்சணியம் அடையும்பொருட்டு, அவைகளின்படி நடந்துவாருங்கள். ஏனெனில் ஆண்டவர், பிள்ளைகள் தந்தையைச் சங்கிக்கவேண்டுமென்றும், தாயின் அதிகாரத்திற்கு உட்பட்டிருக்க வேண்டுமென்றும் ஏற்படுத்தியிருக்கிறார்." (சர்வப்பிரசங்கி : 3 : 2, 3)
8. "உன்னை ஈன்ற பிதாவுக்குச் செவிகொடு. உன்தாயும் வயோதிபம் அடைந்திருக்கையில் அவளைப் புறக்கணியாதே. உன்தந்தையும் தாயும் அகமகிழ்வார்களாக! உன்னைப்பெற்றவள் அக்களிப்பாளாக!!" (பழமொழி : 23 : 22—25)
9. "பிள்ளைகளே கடவுளுக்கு விரோதமில்லாத காரியங்களில் உங்கள் பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள். இது நியாயமான செயலாகும். உன்பிதாவையும் மாதாவையும் சங்கித்திருப்பாயாக. இதுவே நீ நன்றாயிருப்பதற்கும், பூமியிலே நீண்ட ஆயுள் உள்ளவனாயிருப்பதற்கும் — என்ற வாக்குறுதியை உடைய கடவுளின் முதற் கற்பனையாயிருக்கிறது" (புனித சின்னப்பர், எபேசியர் : 6 : 1, 2, 3)



நெஞ்சம்
மறப்பதில்லை
திருமதி. ஜெயபாக்கியம்
கொன்ஸ்ரன்ரைன்
அவர்களின்

## அமரதின நினைவு

பிறப்பு : 13-11-1897
இறப்பு ; 24-9-1967.

அன்னையுந்தன் அரவணைப்பை
இவ்வுலகில் நாம் இழந்தே
ஆண்டு மூன்று போனதம்மா!'...
யாருமில்லை அவனியிலே
உன்னிடத்தை நிரப்புதற்கு;
உத்தமியுன் பாசமதை
உன்னியுன்னி உளம் நொந்தே
கண்ணீரை உகுக்கின்றோம்;
கனவினிலும் நினவினிலும்
காண்கின்ற அன்புமுகம்
காண்பதெப்போ? சொல்லம்மா?
கண்ணீர் தான் எஞ்சுவதோ?...
மனதினிலே பொங்கி வரும்
துயர் என்றும் கூடுமல்லால்
மாதரசியுனை நெஞ்சம்
மறப்பதில்லை யெந்நாளும்.

இவருடைய ஆன்ம சாந்திக்காக இம்மாதம் 24-ம் திகதி காலை 6-15 மணிக்கு யாழ்/ கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலை ஆலயத்தில் பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரது பிரிவால் துயருறுவோர்: கணவன், மக்கள், மருமக்கள், பேரர்.

8, கதிட்ரல் வீதி,
யாழ்ப்பாணம்.

115/70.

## நன்றியறிந்த தோத்திரங்கள்

பிறேக் நகர திவ்விய பாலக யேசுவின் இரக்கத்தாலும், சதா சகாயமாதா, யூதா ததேயு, அந்தோனியார் மற்றும் புனிதர்களின் மன்றாட்டினாலும் யான் கேட்ட வரங்கள் கிடைக்கப் பெற்றேன் இவர்களின் நாமம் என்றும் புகழப்படுவதாக. நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்.

ஓர் அடியாள்.
யாழ்ப்பாணம்.

112/70.

* * *

சற்பிரசாதநாதரின் இரக்கத்தினாலும், யேசுவின் திருஇருதய ஆண்டவர் இரக்கத்தினாலும், தேவதாயார், அர்ச். அந்தோனியார், இவர்களின் வேண்டுதலினாலும் எனது கணவனுக்கு உண்டாகிய மனநோய் குணமாகியது. காலதாமதத்திற்கு மன்னிப்புக்கோரி நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கின்றேன்.

வங்கலை ரி. சி. டலிமா

116/70.

* * *

தேவமாதாவினால் என் மன்மன்றாட்டு கேட்கப்பட்டமையினால் நேர்த்தியின்படி இதனைப் பிரசுரிக்கிறேன்.

ஓர் அடியாள்.
பேட்லன்

114/70.

* *

புனித யூதாததேயுவிடம் கேட்ட மன்றாட்டு கிடைக்கப்பெற்றது நேர்த்தியின் பிரகாரம் இந்நன்றியறிதலைப் பிரசுரிக்கிறேன்.

ஜே. திரேசா,
மட்டக்களப்பு.

113/70.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதசாட்சி எறிந்த வெள்ளிச் செபமாலை

"முத். ஜோன் ஒகில்வியே சுவாமியார் ஸ்கொட்ஸ் சாதியினரான ஒரு யேசுசபைக் குருவானவர். கிளாஸ்கோ என்பது ஸ்கொட்லாந்தின் தலைநகர். அதில் இக் குரு சுவாமியார் 1615ஆம் ஆண்டு வேதசாட்சியாக மரணமடைந்தார். விரைவிலே இவர் புனிதர் பட்டம் அருளப்படுவார் போல் தெரிகிறது. இவருடைய வாழ்க்கை வரலாற்றில் கண்டுள்ளபடி,

"குறித்த ஒரு கோமகளை அவர் திருமணஞ் செய்வாராகில் மன்னிப்பு அருளப்படுவார், தூக்குத்தண்டனையிலிருந்து விடுதலை செய்யப்படுவார், உயிர்பிழைத்திருக்க விடப்படுவாரென அவருக்கு உறுதி வாக்கு அளிக்கப்பட்டது. திருமணம் அன்றேல் தூக்குமரம். இரண்டில் ஒன்றைத் தெரிந்துகொள்ளுமாறு அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

"ஓர் அலங்கார ரூபவதியான அந்தக் கோமகளும் ஆடம்பரமான மணவுடைகள் அணிந்தவளாய்த் திருமணக் கோலமாக நீதிமன்றத்துக்கு அழைத்துக்கொண்டு வரப்பட்டாள். அப்பொழுது சுவாமியார் அவளை ஒருதடவை அவதானித்துவிட்டுத் தமது வதனத்தில் புன்னகை தவழ, "நான் திருமணத்தை அல்ல, தூக்கு மரத்தையே தெரிந்து கொள்ளுகிறேன்" என்று சாந்தமாக மொழிந்தார். அதனால் அவர் தூக்குமர மேடைக்குக் கொண்டு செல்லப்பட்டார். வேதத்திற்காகத் தமது ஆருயிரை நீத்தார். வேதசாட்சிகள் மத்தியில் ஒரு வேதசாட்சியாய் அமரத்துவமெய்தினார்.

"ஸ்கொட் சாதியினருள் கடைசியாகப் புனிதர்பட்டம் அருளப்பெற்றவர்கள் ஸ்கொட்லாந்தின் மாகிறேற் அரசியும் (1250) அங்கு பேர்த் நகரில் பிறந்த ஜேசெஸ்றரின் வில்லியமுமே (1256). ஜோன் ஒகில்வியோ சுவாமியாருக்குப் புனிதர் பட்டம் அருளுவதற்கான விசாரணை (1628)ஆம் ஆண்டு தொடக்கப் பட்டது. இவர் 11ஆம் பத்திநாத பாப்பானவரால் முத்திப்பேறு பெற்றபட்டம் அருளப்பட்டனர்."

—பத்திரிகைச்செய்தி

மரணதண்டனை விதிக்கப் பெற்ற ஒல்கிவியோ சுவாமியார் தூக்குமேடையில் கொண்டுபோய் நிறுத்தப்பட்டார். வேதசாட்சிகளைத் தூக்கிலிடுமுன் அவர்களுடைய கரங்களைப் பிணைத்துக் கட்டுவது அக்காலத்து வழக்கமாயிருந்தது. ஆனால் அவருடைய கரங்கள் இரண்டையும் சங்கிலியால் இறுகப்பிணைத்துக் கட்டுவதற்கு இன்னும் ஒரு கண்ணிமைப்பொழுதுதான் இருந்திருக்கும். அதற்குள் அவர் தமது கரத்திலே செங்கதிரோனின் செம்பொற் கதிர்கள் வீசப்பெற்றுப் பளிங்கைப் போன்று பளீரிட்டு ஒளிவீசிக் கொண்டிருந்த தம்முடைய வெள்ளிச் செபமாலையைத் தூக்குமர மேடையைப் புடை சூழ்ந்துநின்ற சனக்குழாமிடையே சமூகமாயிருந்த கத்தோலிக்க மக்களுக்குத் தமது பிரியாவிடை வெகுமதியாக அவர்களைப் பார்த்து வீசியெறிந்தார்.

அவ்வாறு அவர் வீசியெறிந்த வெள்ளிச் செபமாலை அந்நாட்களிலே இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து என்னும் நாடுகளில் தேசசஞ்சாரம் செய்து கொண்டிருந்து, வேடிக்கை பார்க்குமுகமாக அத்தருணம் அங்கு சமுகமாயிருந்த குலமகனான ஓர் இளைஞனின் மார்பில் போய்ப் பக்கென

— "ஞானம்" —

விழுந்தது. அவர் ஓர் அந்நிய நாட்டினர். ஒரு செல்வந்தரின் புதல்வர். கல்வின் மதத்தவர். தமது மார்பில் அந்தச் செபமாலை விழுந்தபின் நிகழ்ந்தவைகளைத் தானாகவே அவர் பின்வருமாறு தெரிவிக்கின்றார்.

அன்றுதினம் நான் கிளாஸ்கோ நகரில் இருக்கநேர்ந்தது. ஒல்கிவியோ சுவாமியார் தூக்குமர மேடை அமைந்துள்ள இடத்திற்கு அமைதியாக நடந்துசெல்லுகையில் அவரைப் பின்தொடர்ந்து சென்ற திரளான மக்களின் பெருமூச்சையும், பிரலாபத்தையும் கவனித்தபொழுது, ஒருபால் எனக்கு ஆச்சரியமும், மறுபால் அனுதாபமும் உண்டாக, அவற்றால் உளம் கவரப்பெற்று, நடக்கப்போவதை அறியும் நோக்கமாய் நானும் அவர்களில் ஒருவனாக நடந்து சென்றேன். அங்கு தூக்குமர மேடையில் நான் கண்ட காட்சி என்னைத் தூக்கி வாரிப்போட்டதுபோல் இருந்தது. வெற்றிமாலை சூடப்போகும் ஒரு வீரர்திலகம்போன்று சுவாமியார் தூக்குமரமேடையேறினார். அங்கே அவர் மரணத்தை எதிர்கொண்டு முகமலர்ச்சியுடன் வர நேர்ந்தபொழுது, அவரில் காணப்பட்ட மனச்சாந்தியையும், முகமலர்ச்சியையும் சந்தோஷத்தையும் என்னால் வர்ணித்தெழுத இயலாது. அவர் தங்களுக்கு ஏதும் பிரியாவிடைச் செய்தி விடுப்பாரென அங்கு குழுமியிருந்த அவருடைய ஞானமக்கள் ஆவலுடன் எதிர்பார்த்தார்கள். ஆனால், அவரோ வாய்திறக்கவுமில்லை, ஒரு வார்த்தைதன்னும் உரைக்கவுமில்லை. அப்பொழுது அவர் கரங்களைப் பிணைத்துக் கட்டுவதற்குச் சங்கிலி எடுக்கப்பட்டது அதைக்கட்ட இன்னும் ஒரு சில நொடிப்பொழுதுதான் இருக்கும். அதற்குள் அவர் தமது கரத்திலே மதித்தற்கரிய ஒரு பவளமாலையைப்போன்று இலங்கித்துலங்கிய அழகிய வெள்ளிச் செபமாலையைக் கல்லுவிட்டெறிந்தாற்போன்று அவர்கள் மத்தியில் சட்டென வீசியெறிந்தார். அதுவே அவர்களுக்கெல்லாம் அவருடைய பிரியாவிடை[illegible] செய்திபோல் இல்லை. பிரியாவிடைப் பெரும் நன்கொடை போல எனக்குப் புலப்பட்டது.

எழுந்தமானமாக எறியப்பட்ட அந்தச் செபமாலை எவர்கைப்படுமோ? அதனை ஏந்தியெடுக்கும் அதிர்ஷ்டசாலி எவராயிருப்பாரோ? என்று நான் எண்ணியதுதான், இத்தனைபேரெல்லாம் இருக்க, ஏதோ ஒரு புதுமையாக அது மோதியடித்துக் கொண்டுவந்து என் மார்பில் விழவே, அந்த அதிர்ஷ்டசாலி நானே யெனக் கண்டேன். நிலத்தில் விழவிடாது அதனை ஏந்தினேன். கையிலெடுத்தேன். என்னை அறியாமலே குனிந்து என் உதடுகளால் அதற்கு ஒரு முத்தம் கொடுத்தேன். ஆனால் என்ன துரதிர்ஷ்டம்! கடலலைகள் மலைபோலெழுந்து எதிர்கொண்டு வந்தாற்போன்று அங்கு சமுகமாயிருந்த கத்தோலிக்க மக்கள்குழாம் அதைக் கைப்பற்றுமாறு ஒருங்கே திரண்டு, விழுந்தடித்துக்கொண்டு என்மேல் பாய்ந்துவரக் கண்டதே நான் பயப்பிராந்தி கொண்டவனாய் உயிர்பிழைத்தாலே போதுமென்று அப்பால் அதை வீசியெறிந்துவிட்டேன். அவ்விதம் எறிந்திராவிடின் என்கதி...! அவர்களால் நெரியுண்டு, மிதியுண்டு, என்னுயிரே போயிருக்கும் நிச்சயம்.

நிற்க, அந்தச் செபமாலையை அப்பால் எறிந்துவிட்டுத் திரும்பியதுமுதல், என்னகாரணமோ அறியேன், என் மனம் நிம்மதி கொள்ளவில்லை. என் மார்பில் வந்துவிழுந்த செபமாலை எனது நெஞ்சில் அல்ல, ஆனால் என் ஆத்துமத்தில் ஆழமான ஒரு காயத்தை உண்டுபண்ணிவிட்டது. உண்ணும்பொழுதோ, உறங்கும்பொழுதோ, உலாவும்பொழுதோ, என் மனதில் சமாதானத்தைக்கண்டு கொள்ளமுடியாது தவித்தேன். "அந்த ஒரு வினா" அடிக்கடி என் மனதில் எழுந்து என்னை வருத்திக்கொண்டிருந்தது. அதாவது—"அந்த வேதசாட்சியின் செபமாலை ஏன் மற்றொருவர்மேல் போய் விழாது, என் மார்பில் வந்து மோதியடித்துக்கொண்டு விழ வேண்டும்?" இந்த வினாவை வருடக்கணக்கில் நானே எனக்குள் வினாவிக்கொண்டு வந்தேன்.

ஆமாம், நான் சேர்ந்துள்ள கல்வின் மதத்திற்கு ஏது செபமாலை? அந்த வினாவுக்குக் கடைசியாக விடைகண்டேன். நிம்மதிகொண்டேன். செபமாலை சொல்லக்கற்று அதைச் சொல்லிவந்தேன். என் மனச்சாட்சி என்னை வெற்றிகொண்டது. மனந்திரும்பினேன். கல்வின் மதத்தைத் துறந்தேன். ஒரு கத்தோலிக்கனானேன். இந்தப் பாக்கியமான மாற்றத்திற்குக் காரணம் என்ன? ஒகில்வியே சுவாமியாரின் செபமாலையன்றி பிறிதொன்றுமல்ல. [illegible] செபமாலை இப்பொழுது என் கைவசமிருந்தால் தங்கப் பவுண்களை என்முன் கொண்டு வந்து குவித்தபோதிலும் அதைக் கைவிடமாட்டேன். அந்தப் புனிதமான செபமாலையில் எத்தனை மணிகள் உண்டோ அத்தனை தங்கப்பதக்கங்களைக் கொடுத்து அதை வாங்குவதற்கும் பின்வாங்க மாட்டேன்.

மாதா எம்மில் கனிவுகொண்டு அளித்த மணிமாலையாகிய செபமாலை நம்மிடம் உண்டா? அதைக் கருத்தாகச் சொல்லிவருகின்றோமா? சுபம்.

# அரசர் கட்டிய பாரிய ஆச்சிரமம்

**தற்பொழுது பிரான்சின் வடபகுதியில் இருந்துவருகின்ற சென்குவென்ரின்நகர் முற்றிகையின்போது ஸ்பானிய படைகள் அங்கு புனித லவுறேஞ்சியார் பேரால் இருந்துவந்த கோவில் ஒன்றை அழித்துவிட்டன. அதற்கு ஒரு பரிகாரமாக ஸ்பானிய தேச பிலிப் அரசர் புனித லவுறேஞ்சியார் பேரால் பாரிய சந்நியாச ஆச்சிரமம் ஒன்றைக் கட்டினார். அது பற்றிய விபரம் வருமாறு!**

ஸ்பானிய தேசத்தின் தலைப் பட்டணமாகிய மதிரித் நகருக்குச் சமீபமாக இருந்துவரும் எஸ்கோறியல் என்ற சிறிய பட்டினம் சமீபத்திலே அதன் பாதுகாவலரான புனித லவுறேஞ்சியாரின் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடியது. இந்தப்பட்டினம் ஒரு நேர்த்தியைப் பூர்த்திசெய்யுமாறே இரண்டாவது பிலிப் அரசர் கட்டிய ஒரு சந்நியாச ஆச்சிரமத்தைச் சூழவா அமைந்து விருத்திபெற்று விளங்குகிறது. அகுஸ்தீனார் சபைச்சந்நியாச குரவர்களில் ஒருவரே இந்தப்பிரமாண்டமான கட்டடத்திற்குப் பொறுப்பாளியாயிருந்து அதனைப் பரிபாலனஞ்செய்து வருகின்றார். சபைச் சந்நியாசர்கள் பயபக்தியாக மந்திரமாலை செபிப்பதைக் கேட்பதற்கு வரும்போதெல்லாம் பிலிப் மன்னர் அங்கு பாடகர் குழாம் அமர்ந்திருக்கும் இடத்திலே உட்கார்ந்திருந்த ஆசனம் இப்பொழுதும் இருந்துவருகிறது. இந்தப் பாரிய கட்டடத்தின் அடக்கமான அழகிய பகுதியாதெனில், தமக்கென அவர் சொந்தமாகக் கொண்டிருந்த பெருமாளிகையே. ஆனால், அது தமக்கல்ல; இறைவனுக்கென்றே தாம் அதனைக் கட்டியதாக எப்போதும் சொல்லி வந்தார்.

அதிலுள்ள சர்வகலாசாலையும் பிரசித்தி பெற்றதாகும். அதன் கதவுக்குமேலாக ஸ்பானிய உள்நாட்டு யுத்தத்தில் இறந்த அகுஸ்தீனார் சபைக் குருமாரின் ஞாபக சின்னம் ஒன்று காணப்படுகின்றது. அவர்கள் வேதசாட்சிகளென்றே அழைக்கப்படுகிறார்கள். இறைவனுக்கும், ஸ்பானிய நாட்டிற்குமாக நடைபெற்ற புனிதமான போரொன்றில் அவர்கள் உயிர்துறந்தார்கள். அவ்விதம் உயிர்துறந்தவர்களின் நாமவரிசையில் மாகாண அதிசிரேட்டரான வண. அவெலினோ றொட்றிக்குவெஸ் சுவாமிகளின் நாமமே முதலிடம் பெற்றிருக்கின்றது. உள்நாட்டு யுத்தம் ஆரம்பமானபோது இந்த ஆச்சிரமத்தில் மாகாண குருமார் சங்கம் நிகழ்ந்து கொண்டிருந்தது. கம்யூனிஸ்தர்கள் மதிரித் தலைநகரைத் கைப்பற்றிவிட்டார்கள். பின்னர் இந்த ஆச்சிரமம் இருந்துவந்த எஸ்கோறியல் பட்டினம் அந்நகருக்குச் சமீபமாக இருந்தமையாலே அத்தனை குருமாரும் இலகுவில் கைதுசெய்யப்பெற்றுச் சுருக்கமாக ஒரு விசாரணையின்பின் மரணதண்டனைக்குள்ளானார்கள்.

அங்கிருந்த சர்வகலாசாலை இளம் மாணவர்களுக்குக் கம்யூனிஸ்தர்கள் செய்தகட்டனையோ பெரிது. அவர்களைச் சித்திரவதை செய்தார்கள். தேவதூஷணஞ் சொல்லுமாறு பலவந்தப்படுத்தினார்கள். மாகாண சிரேட்டரான வண. அவெலினோ றொட்றிக்குவெஸ் சுவாமிகள் உயிர்பிழைக்கக் கூடியவராயிருந்தார். ஆனால், தமது மாணவர்களைக் கடைசி பரியந்தம் வேதவிசுவாசத்தில் நிலைபெற உதவிசெய்யுமுகமாக அவர்களுடன் தங்கியிருக்கவே திடசங்கல்பம் செய்தார். அதனால் அவர் மற்றும் நூற்றுக்குமேற்பட்ட அகுஸ்தீனார்சபைக் குருமாருடன் ஒருங்கேகொலை செய்யப்பட்டார். அதனால் ஜெனறல் பிறங்கோ அவர்கள் கம்யூனிஸ்தர்களை எதிர்த்துப் போரில் இறங்கி அவர்களைப் புறங்காட்டச் செய்கிறாரென்ற செய்தியைக் கேட்க அங்கு ஒருவர் தானும் உயிரோடிருக்கவில்லை.

● சந்திரனிலே மனிதனை இறக்கும் திட்டம் எதுவுமே ருஷியாவிடம் இல்லை; வான்வெளி ஆராய்ச்சியில் மட்டுமே கவனம் செலுத்த ருஷியா முடிவுசெய்திருக்கிறது; வான்வெளி ஆராய்ச்சியில் அமெரிக்காவுடன்சேர்ந்து ஒத்துழைக்க ருஷியா தயாராயிருக்கிறதென்று ருஷிய பிரபல விஞ்ஞானியான திரு. கெல்டிஷ் மஸ்கோநகரிலே பத்திரிகை நிருபர்களுக்குத் தெரிவித்திருக்கின்றார்.

● இத்தாலிக்கும், பிரான்சுக்குமிடையே எல்லைப்புறத்துக்குச் சமீபமாக சவலோய் மாவட்டத்திலுள்ள ரிக்லெஸ் எனும் சிறிய கிராமத்தில் மறுரூபமான யேசுவின் பேரால் ஒருபுதிய கோவில் கட்டப்பெற்றுக் கருதினால் கறேன் ஆண்டகையால் அண்மையிலே அபிஷேகஞ் செய்யப்பட்டுள்ளது. ஐரோப்பாவிலே அதிகம் உயரத்திலுள்ள பங்குக்கோவில் இதுவாகும். மலைகள் சூழ்ந்த அப்பகுதியில் 4,300 அடி உயரத்துக்குமேல் இக்கோவில் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லுக்குள் ஈரம்

— செல்வி தெல்மா கோமஸ்

மகிழ்ச்சியில் துள்ளித் துள்ளி ஓடி ஓடி நின்று பிறகு மீண்டும் குதித்துக் கும்மாளமிடும் கன்றை ஜன்னலருகில் இருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் ராஜி. ஆறு வயதை அடையாத ராஜியின் களங்கமற்ற முகத்தில் ஓர் ஏக்கத்தின் சாயல். திடீரென்று 'அடியே ராஜி இங்கே வாடி' என்ற கடூர குரல் சமையலறையில் இருந்து வந்தது. ராஜியோ அந்தக் குரலைக் கேட்காதது போல வெறித்த நோக்குடனேயே இருந்தாள். ஆம், அந்தக் குரலைக் கேட்டு ராஜிக்குப் பழக்கம். அவளை அத்தனை அன்பாக அழைத்தவள் அவள் தாய்தான். அந்தப் பரந்த வீட்டில் அவளுக்குக் கிடைக்காதது தாயன்புதான்; அதைத்தான் அவள் தேடிக் கொண்டிருக்கிறாள்.

அதோ அங்கே அந்த இளங் கன்று தாய்ப்பசுவின் மடியை முட்டி முட்டிப் பால் குடிக்கிறது. அந்தப் பசு தன் கன்றை நாக்கினால் நக்கிக் கொடுக்கிறது. மிருகங்களுக்குக் கூட இயல்பாகவே தாயன்பு ஊற்றெடுக்கிறதே; கேவலம் கடவுளால் மிகச் சிறப்பாக உருவாக்கப்பட்ட மனிதனிடம் அது இல்லையே. இந்தத் தத்துவத்தை அந்தப் பிஞ்சு மனம் அறிந்ததோ யாரறிவார். அப்பொழுது அங்கே பேயின் தோற்றமாகத் தோன்றினாள் மங்களம். படபடவென்று அந்தச் சிறுமியின் முதுகில் தன் பலத்தையெல்லாம் ஒருங்கு கூட்டி அடித்தாள். பின்பு "செகிட்டுக் கழுதை கூப்பிட்டது காதில் விழலியாடி" என்றபடி அவளை இழுத்தாள். தாயின் எதிர்பாராத தாக்குதல்களால் வீறிட்டு அழுதாள் ராஜி.

அச்சமயம் அங்கே நுழைந்தாள் ஆயா எலிசா. அவள் "என்னம்மா இப்படி அவளைக் காலங்காத்தாலே அடிக்கிறீர்களே" என்று ராஜியைத் தூக்கிக் கொண்டாள். அதற்கு மங்களம், "உன் செல்லம் தான் எலிசா; அவள் அப்படி மாறக் காரணம்" என்றபடி தன் வேலையைக் கவனிக்க உள்ளே சென்றாள். பயந்தபடி அழுகையினூடே எலிசாவின் தோள்களைப்பற்றி, "ஆயா என்னை அம்மாவிடம் விட்டு விடாதே; உன்னோடே நான் வாரேன்" என்று விம்மிவிம்மி அழுதாள். இதைப் பார்க்க எலிசாவின் கண்களும் கலங்கின. அவள் ராஜியை ஒருவாறு ஆசுவாசப்படுத்திவிட்டுத் தன் வேலைகளைக் கவனிக்கச் சென்றுவிட்டாள். தனிமையில் விடப்பட்ட ராஜி, "கடவுளே இந்த அம்மாவுக்குப் புத்தியைக் கொடேன்" என்று வாய்விட்டு அரற்றினாள்.

மங்களம் பீற்றர் இருவருடையவும் அன்புக் குழந்தைதான் ராஜி. பீற்றர் உட்பட வேலைக்காரர்கள் அனைவரும் ராஜியின்மீது பாசம் கொண்டிருந்தார்கள். ஆனால் மங்களம் தான் ராஜியை வெறுத்தாள். இதற்குக் காரணம் புரியாத புதிராகவே இருக்கிறது. மங்களத்திற்குப் பிள்ளைகளையே கண்ணினால் காணப் பொறுக்க மாட்டாள். அவர்களைக் கொண்டு தன் தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்புவாள். தனிப் பிறவியாகப் பிறந்த மங்களம் திருமணம் முடிந்த பின்பும் அவ்வாறேதான் இருந்தாள். தன் சாயலின் பிரதிபிம்பமான ராஜியின்மேல் அவள் பாசம் கொள்ளவில்லை. இதற்காக மங்களம் ஈவு இரக்க மற்றவள் என்று மற்றவர்கள் சொல்லும் வண்ணம் அவள் குணம் பிரபல்யம் ஆகிவிட்டது. குழந்தை ராஜியை அவள் எங்கும் செல்லவிட மாட்டாள். வீட்டிற்குள்ளேயே அவளை வைத்திருப்பாள். இதனால் ராஜியின் மனம் வெகுவாகப் பாதிக்கப் பட்டுவிட்டது. வெளியே விளையாடச் சென்றுவிட்டாலோ அன்று முழுவதும் ராஜியின் பாடு திண்டாட்டம்தான். மங்களத்தின் குணத்தை அறிந்த பீற்றர் எவ்வளவோ எடுத்துக் கூறியும் அது பயன்படவில்லை. உத்தியோகம் காரணமாக அடிக்கடி வெளியூர் போகும் பீற்றரினால் ஒன்றும் செய்ய முடிவதில்லை. ராஜியும் தந்தை வந்தால் 'அப்பா, அப்பா' என்று உயிரையே விடுவாள். பீற்றர் அவளிடம் இரகசியமாக 'அம்மா அடித்தாவா ராஜீ' என்று கேட்டால் இல்லையென்றே மறுத்துவிடுவாள்.

அன்று தேவமாதாவின் மோட்ச ஆரோகணத் திருநாள் எலிசா கோவிலுக்குப் போவதற்கு ஆயத்தமானாள். ராஜியும் கூட வருவதாக முரண்டு செய்தாள். எலிசாவுக்கே எஜமானி அம்மாளிடம் ராஜியைக் கேட்டு அழைத்துப் போகப் பயம். உத்தரவு கேட்கப்போனால் அதனால் அடிபடுவது அந்தச் சிறுமிதானே. ஏதோ துணிவு வந்தவளாய் ராஜியையும் அழைத்துக் கொண்டு மங்களத்திடம் கூறாமல் போய்விட்டாள். கோவிலிலே ராஜி அந்தத் தேவதாயின் கண்களில் பெருகி ஓடும் பாசத்தில் லயித்துச் சந்தோஷப்பட்டாள். பூசை முடிந்ததும் எலிசாவுடன் வீடு திரும்பினாள் ராஜி. அங்கே மங்களம் கையில் தடியுடன் கோபம் கொண்ட சிங்கத்தைப்போல் நின்றிருந்தாள். ராஜி நடுநடுங்கிப்போய் எலிசாவின் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். எலிசாவும் பயந்துதான் போனாள். ஆயினும் துணிவுடன் எஜமானி அம்மாளை நெருங்கி, "அம்மா கோவிக்காதீங்க, குழந்தை ஆசைப்பட்டது, அதுதான் அம்மா கூட்டிக்கிட்டுப் போனேன்" என்றாள். இதைக் கூறி முடிக்குமுன் "என்னிடம் சொல்லாமல் என் பிள்ளையைக் கூட்டிக்கொண்டு போக உனக்கு அவ்வளவு திமிரா" என்று கேட்டபடி ராஜியை இழுத்து, "உனக்கு அவளோட போக துணிவு வந்துவிட்டதாடி" என்று மேலும் ஏதோ கேட்டு ராஜியைக் கையிலிருந்த கம்பினால் நையப்புடைத்தாள். வீறிட்டு அலறினாள் ராஜி. அவளைத் தடுக்க எலிசாவால் முடியவில்லை. எஜமானிமுன் கேவலம் வேலைக்காரி என்ன செய்வாள். மங்களம் ராஜியை இழுத்துச் சென்று ஒரு அறையில் விட்டுப் பூட்டிவிட்டுச் சென்றாள். அடியின் வேகத்தைத் தாளமுடியாமல் ராஜி துவண்டு கிடந்தாள். அவள் வாய் "கடவுளே அம்மாவுக்குப் புத்தியைக் கொடு" என்று முணுமுணுத்தது.

[illegible]

மனைவி தந்த தேனீரை சுவைத்தபடி, ராஜீ எங்கே என்று வினவினான். அப்பொழுதுதான் மங்களத்திற்கு ராஜியின் நினைவு வந்தது. காலையிலிருந்து ராஜியைத் தான் பார்க்கவில்லை என்ற குற்றம் உந்த ராஜியைப் பூட்டி வைத்த அறையை நோக்கி நடந்தாள். அப்பொழுது அங்கே வந்த எலிசா காலையில் நடந்தவற்றைப் பீற்றரிடம் கூறிவிட்டாள். மனம் துடிதுடிக்க மனைவியையும் முந்திய படி ராஜி பூட்டப்பட்டிருந்த அறையை அடைந்து கதவைத் திறந்தான். அங்கே ராஜி நிலத்தில் வாடிய மலர்போல் கிடந்தாள். அவள் கண்கள் மேலே சொருகிப் போய்க் கொண்டிருந்தன. தந்தையைக்கண்ட ராஜி 'அப்பா பூச்சி' என்று ஒரு திசையை சுட்டிக்காட்டினாள். அங்கே ஒரு பாம்பு நெளிந்து நெளிந்து ஓடிக்கொண்டிருந்தது. மங்களம் பீற்றர் இருவரும் திகைத்துப்போய் நின்றிருந்தார்கள். திடீரென்று எலிசா உள்ளே நுழைந்து அந்தப் பாம்பை அடித்துக் கொன்றாள். ராஜி பீற்றரின் கால்களில் ஏதோ முணுமுணுத்தபடி கண்களை மூடினாள்.

ஆகவே எத்தகைய பாவம் செய்த மனிதனின் இதயத்திலும் கடவுளின் அன்பு புதைந்து கிடக்கும். அதன் மேலுள்ள மாசுகளை அகற்றி [illegible]வுளின் அன்பை வெளிய[illegible]ரங்கமாய் ஒவ்வொருவரும் செபிக்க வேண்டும். இடைவிடாத செபம் எந்தக் கல்மனதையும் எத்தனை காலம் சென்றபின்பும் கனியவைக்கும் என்பது உண்மையிலும் உண்மை.

# பரிசுத்தமும் திருச்சபையும்

(பிதா உவில். யேசுதாசன், ஓ. எம். ஐ.)

"தற்காலத்தில் நாம் சருவேசுரனுடைய பாவவாளியான திருச்சபையில் விசுவாசத்தை அறிக்கையிட வேண்டியிருக்கின்றது" என்று கத்தோலிக்க எழுத்தாளர் ஒருவர் கத்தோலிக்க பத்திரிகை ஒன்றில் பிரசுரப்படுத்தியிருக்கிறார். ஒரு வேதபாரகன் கிறீஸ்துவை திருச்சபையை நோக்கி: "நீ பிசகுகாறி" என்று சொல்லப் பண்ணுகிறார்: இவை உண்மையோடு பொருந்துகின்றனவா? அர்ச். பாவிலுவானவர் திருச்சபையை "மகிமையுள்ளவ, கறைதிரை இவைமுதலியவை ஒன்றுமில்லாதவ, பரிசுத்தமானவ, மாசற்றவ" என்று அழைக்கவில்லையா (எபே: v. 27)? விசுவாசப் பிரமாணத்தில் "பரிசுத்த திருச்சபையை விசுவசிக்கிறேன்" என்று சொல்லுகிறோமல்லவா?

நமது ஆண்டவர் பரிசுத்தமாக்கும் அதிகாரிக்கும், பரிசுத்தமாக்கப்படும் அங்கத்தவர்களுக்குமிடையில் வித்தியாசம் இருக்கிறதென்று சொல்லி, சிலபேர் இருபகுதிக்கும் சேருமதியானவர் என்றும் காண்பிக்கிறார் (மத். xxiii. 2—3). அவர் இவ்விடத்தில் சொல்லுவது பழைய ஏற்பாட்டோடு இணக்கமாயிருந்தாலும், அது புதிய ஏற்பாட்டோடும் பொருந்தும். நாம் பரிசுத்த திருச்சபையைப் பற்றிப் பேசும்போது முதல்முதல் பரிசுத்தமாக்கும் அதிகாரியையே கருதுகிறோம்: இவ்வதிகாரிக்குக் கிறீஸ்து பரிசுத்த போதனையையும், புதுமைசெய்கிற அநேக புனிதர்களை உண்டுபண்ண வல்லமையுள்ள வழிவகையையும் கொடுத்து, அதை ஏற்படுத்தினார்;

திருச்சபையின் அங்கத்தவர்களுக்குள் நல்லவர்களும் தீயவர்களும் இருப்பார்கள் என்று நமது ஆண்டவர்தாமே சொல்லியிருக்கிறார் (மத். xiii—30). நல்லவர்கள் திருச்சபையின் ஆத்துமத்திற்குச் சேர்ந்தவர்கள் என்கிறோம், ஏனெனில், அவர்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் அர்ச்சிக்கும் பிரசாதத்தால் வசிக்கிறார். தீயவர்களும் பரிசுத்தமாக வரவேண்டியவர்களாய் இருப்பதால், அர்ச். பாவிலுவானவர் திருச்சபையின் அங்கத்தவர்கள் எல்லோரையும் "அர்ச்சியசிஷ்டர்கள்" என்கிறார் (உரோ: xvi—16): ஆகையால் நாம் பரிசுத்த திருச்சபையைப் பற்றிப் பேசும்போது இரண்டாவதாக திருச்சபையின் சகல அங்கத்தவர்களையும் கருதுகின்றோம்; இவர்கள் எல்லோரும் அர்ச்சியசிஷ்டர்களாகவர அழைக்கப்படுகிறார்கள்: இவர்களுள் அநேகர் அர்ச்சியசிஷ்டர்களாக, அதாவது பிரசாதநிலையில் இருக்கிறார்கள்.

தீயவர்கள் புறம்பான — ஒரு பாவவாளியான திருச்சபையாகச் சேருகிறதில்லை. அவர்கள் திருச்சபையின் சரீரத்தின் அங்கத்தவர்களாய் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கிறீஸ்துவிலிருந்து பிரசாதசீவியம் பாய்கிறதில்லை; அவர்களின் நிமித்தம் முழுத் திருச்சபையையும் "பாவவாளியான திருச்சபை" என்று அழைப்பதற்குப் பைபிளிலாவது அப்போஸ்தலிக்க பாரம்பரியத்திலாவது ஓர் ஆதாரமும் இல்லை.

# உயிர் வாழுகின்றேன்!

(வாகரைவாணன்)

இதற்குள் நான் இறந்திருக்க வேண்டும்
    என்னுடலை விழுங்கிய குழியின்மேலே
புதர்க்காடும் எழுந்திருக்க வேண்டும்; அதற்குள்
    பூச்சிபுழுக் குடும்பமும் ஜனித்திருக்கவேண்டும்
எதற்கோ நான் வாழ்கின்றேன்! எனக்கே தெரியாது!
    இறைவனின் விருப்பம் இதுவானால்
அதற்காக வாழ்ந்தாக வேண்டும்; அதனாலே
    அகிலத்தில் வாழ்கிறேன் நடைப்பிணம்போல்!

வாழ்க்கையிலே நான் கண்ட மேடுபள்ளம்;
    வழுக்கிவிழுந்தெழுந்த பல சந்தர்ப்பங்கள்;
நாக்கிரண்டால் பேசுகின்ற மனிதராலே
    நான்பட்ட துன்பங்கள்; நாணயக்குறைவு;
தாக்கியென்னை அழிக்கச் சில 'பெரும்'மனிதர்
    செய்தகொடுஞ் சதிக்குப் பலியானநாட்கள்;
தூக்கியெறி பந்தென்ன விதியின் கையில்
    சிறியோன்நான் அகப்பட்டுப் பட்டபாடு;

எழுதில் ஒரு காவியமாய் நீண்டுபோம்
    இராமாயணம்கூட இதற்குத் தோற்றுப்போம்
அழுதழுது படிப் பார்கள் வாசகர்கள்
    அரியரெத்தினம்கதை ஒரு துன்பக்காடு!
முழுதுமென் சரிதையைப் படிப்போர், பலவீனத்தால்
    மூச்சடைத்துச் செத்தாலும் சாகக்கூடும்
தொழுதுநான் வேண்டுகிறேன் தெய்வத்தை; இத்
    துன்பங்கள் யாருக்கும் வரக்கூடாதென்று!

இறைவனின் அருளாலும்; எனை உலகில்
    ஈன்றெடுத்த அன்னையின் அன்பினாலும்
குறையாத என்மனத் துணிவினாலும், நான்
    கொண்டுள்ள இலட்சிய வேட்கையாலும்
நிறைவான உளமுள்ள சில மனிதர்
    நெடுமரம்போற் தருகின்ற நிழலினாலும்
இறவாது நானுமுயிர் வாழ்கின்றேன்
    இதுஎன் தங்கைமேல் ஆணை! ஆணை!!

# விளையாட்டுப் போட்டிகள்

இளவாலை புனித யாகப்பர் பங்கின் இளைஞர் கழக, பீற்றர், போல் இல்லங்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் 30-8-70 இல் நடைபெற்றன. கட்டளைக்குருவர் வண. டெய்சி அடிகளார் கழகக் கொடியை ஏற்றி விளையாட்டுகளை ஆரம்பித்து வைத்தார். இளைஞர்களுக்கான விளையாட்டுகள், பெண்களுக்கான விளையாட்டுகள், சிறுவருக்கான விளையாட்டுகள் இடம்பெற்றன.

பீற்றர் இல்லம் அதிகப்படியான புள்ளிகளைப் பெற்று 1-ம் இடத்தையும், போல் இல்லம் 2-ம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. கட்டளைக்குருவர் விளையாட்டுக்களில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார். அவர் தமது உரையில் கூறியதாவது: "விளையாட்டுக்களில் வெற்றி பெறுவது முக்கியம் அல்ல; தோல்வியை ஏற்றுக் கொள்வதே சிறந்த பண்பாகும். விளையாட்டுக்கள் மூலம் உடல் மட்டுமல்ல, உள்ளமும் தூய்மையடைகிறது. அன்பு, பொறுமை போன்ற குணங்களை விளையாட்டுகள் மூலமே நாம் பெற்றுகொள்ள முடியும்." செல்வன் அலோஷியஸ் நன்றி கூறினார்.

—நிருபர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பல தேசங்களில்

● பைபிள் எனப்படும் வேதாகமத்தின் 20,000 புதிய பிரதிகள் சமீபத்தில் ருஷியாவின் தலைப்பட்டணமான மஸ்கோநகரில் வெளியிடப்பட்டிருக்கின்றன. அத்தேசத்திலுள்ள ருஷிய கிறிஸ்த பிரிவினைச் சபையால் இது தயாரிக்கப்பட்டது. பாரம்பரியமான ருஷிய கிறிஸ்த பிரிவினைச்சபை பைபிள் மொழி பெயர்ப்பில் உள்ளதில் அற்ப சொற்ப மாற்றமே இதில் செய்யப்பட்டுள்ளது. பப்ரிஸ்ற் சபை பைபிளின் புதியபதிப்பு ஒன்றும் மஸ்கோநகரில் வெளியாகியிருக்கிறது.

● இலங்கைச் சர்வதேச கணவங்கி சென்ற 16ஆம் திகதியோடு 600 கண்களைப் பிற நாடுகளுக்குத் தானமாக அனுப்பிவைத்திருக்கிறது. இவற்றிலே 600ஆவது கண் அன்று தினம் ஆபிரிக்காவைச் சேர்ந்த கேனியாநாட்டுக்கு விமானமூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இலங்கையிலிருந்து ஆபிரிக்கா பெற்றுள்ள இரண்டாவது கண்தானம் இதுவாகும். முதலாவது கண் இற்றைக்கு ஐந்து வருடங்களுக்குமுன் எத்தியோப்பியாவுக்கு அனுப்பிவைக்கப்படலாயிற்று.

● இருதயநோயாளருக்கு இதுவரை பொருத்தப்பட்டு வந்த பற்றறிகள் இரண்டுவருடங்களுக்குமட்டுமே நின்று பிடிக்கக்கூடியன. அதன்மேல் திரும்பவும் சத்திரசிகிச்சை மூலம் புதியபற்றறிகள் பொருத்தப்பட்டுவந்தன. ஆனல், இந்தப்புதிய அணுச்சக்தி பற்றறிகள் 10 வருடமுதல், 15 வருடங்களுக்கு நின்று பிடிப்பதுடன் அவற்றின்விலையும் அதிகம் குறைவாகும்.

● இரண்டாவது உலகயுத்தம் முடிந்து 25ஆண்டுகள் சென்ற போதிலும் ஜேர்மனி, கோறியா, வியெற்னும், சீனு போன்ற நாடுகள் இன்னுமே இரண்டாகப் பிளவுபட்டுக் கிழிக்கின்றன. உலகின் வல்லரசுநாடுகளில் ஒன்ருகிய ஜேர்மனி இன்னுமே இரண்டாகப் பிரிக்கப்பட்டு மேற்கு-கிழக்கு ஜேர்மனியெனப் பிளவுபட்டு, ஆட்சிமுறையிலும் மாறுபட்டிருக்கக் காரணம் வல்லரசுகளின் சூழ்ச்சியல்லாது வேறல்லவாம்.

திருமறைக் கலாமன்றம்
தயாரித்தளிக்கும்
முத்தமிழ்ச் சித்திரம்
"எழுதிய கரம்"
இசை—உரை நாடகம்
நாள்: 22-9-70
காலம்: பி. ப. 7-00—7-30
இசை: எம். யே. தாஸ்
எழுதியவர்:
நீ. மரியசேவியர்
※ கேட்கத்தவருதீர் வானொலியில் ※

● பஞ்சாப்பிலே ரூபார் எனுமிடத்தில் தேநீர் விற்பவரான பரீத் என்பவர் சென்ற 3ஆம் திகதியன்று ஒருபெரிய சனக்கூட்டத்தின் முன்பாக 5மணித்தியாலத்தில் 80கோப்பை தேநீர் குடித்து ஓர் அரிய சாதனையை நாட்டியிருக்கிறுர். அதனுல் இதற்கு முன் லண்டன்நகரிலே திருமதி மாட்டீன் பிளடலி 6மணிநேரத்தில 78கோப்பை தேநீர் குடித்து நாட்டியசாதனையை இவர் தோற்கடித்திருக்கிறுர்.

● 1972ஆம் ஆண்டு நடக்தேறவிருக்கும அமெரிக்க ஜனதிபதித் தேர்தலிலே செனற்றர் எட்வாட் கென்னடி ஓர் அபேட்சகராகப் போட்டியிடுவாராஞல் தனது சகோதரர் இருவரையும் போலவே அவரும் தீர்த்துக்கட்டப் படலாமெனச் சோவியற் செய்திப் பத்திரிகை எச்சரித்திருக்கிறது. கம்போடியாவிலே அமெரிக்காவின் தலையீட்டை அவர் கண்டித்துச் செனற் சபையில் பேசியதையிட்டு அவரின் உயிருக்குப் பகிரங்க பயமுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் அப்பத்திரிகை கூறுகிறது.

● உலக முழுவதும் ஒரு போதுமே சமாதானம் நிலவியதில்லை என்பது வரலாறுகண்ட உண்மையாகும். மனிதனுல் சமாதானமாகவாழ முடியாது என்பதற்கு இதைவிட வேறு அத்தாட்சி எதுவும் வேண்டியதில்லை. உலகின் ஒருபகுதியில் சமாதானம் நிலவினுல் மறுபகுதியில் சண்டைசச்சரவு இடம்பெறுவது ஒரு வழக்கமாகிவிட்டது. இதற்கு இறை உலகில் சமீபகிழக்கு, தூரகிழக்கு நாடுகளில் நடைபெறும் யூத-அராபிய, வியெற்னுமிய யுத்தங்கள் சான்ருகும்.

● சமீபத்திலே வத்திக்கானுக்கும், கம்யூனிஸ்த நாடாகிய யூகோசிலேவியாவுக்குமிடையே நடைபெற்றிருக்கும் இராசீய உடன்படிக்கையாலே யூகோசிலேவியாவில் திருச்சபை தனது சொந்த அச்சகங்களைக் கொண்டிருப்பதற்கும், குருமாரைப் படிப்பிப்பதற்கும், ஆனல், குருமார் அரசியற் கருமங்களில் தலையிடாமல் கட்டுப்பட்டிருப்பதற்கும் உத்தரவாதங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

● வடஆபுகானிஸ்தானின் மலைகளுக் கூடாக பெரியவீதி ஒன்றை ருஷிய எஞ்சினியர்கள் இப்போது அமைத்திருக்கிறுர்கள். இந்தப்பாதை மஸ்கோநகரைக் காரச்சியுடனும், இந்து சமுத்திரத்துடனும் இணைக்கும் முதல் கோடிப் பாதையும், எந்தச் சுவாத்தியத்திலும் பயன்படுத்தக்கூடிய முதல் வீதியுமாகும். 400மைமல் நீளமான இந்தவீதியை அமைப்பதில் கோடிக்கணக்கான ரூபிள் நாணயங்கள் செலவிடப்பட்டுள்ளன. இந்த வீதியில்தான் உலகின் அதிகம் உயர்ந்த சுரங்கப்பாதை இருக்கிறது. இப்பாதை ஹின்டுக்குஷ் மலையைப் 12,000 அடி உயரத்திலே துளைத்துச் செல்லுகின்றது.

## கிறிஸ்தவ அழைத்தல் என்பது யாது?

சென்றவாரம் பரிசுத்ததந்தைதாம் அளித்த பகிரங்க பேட்டியில் கிறிஸ்தவ அழைத்தல் என்பது யாது என்பதைத் தெளிவாக விளக்கியருளினுர். ஆன்ம நன்மைக்கு உலக நன்மைகள் கட்டுப்பட்டிருப்பதே கிறிஸ்தவ அழைத்தல் என அவர் எடுத்துக் காட்டினுர். மனிதன் ஆத்துமத்தையும், சரீரத்தையும் கொண்ட ஒரு சிருஷ்டி என்பதையும் சரீர சுகங்களும், நன்மைகளும் ஆன்ம நன்மைகளுக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டுமெனஸ்பதையும் மறவாது தனது வாழ்நாளைக் கழிக்க வேண்டியவன் என்பதைப் பரிசுத்ததந்தை அன்று சுட்டிக் காட்டினுர்.

## ஒரு தேசத்துக்கு ஒரு பாதுகாவல் புனிதர்

ஒரு தேசமாயினும், நகரமாயினும், மேற்றிராசனமாயினும், சந்நியாச சபையாயினும், எவ்வித நிறுவனமாயினும் வருங்காலங்களில் ஓர் அர்ச்சியசிட்டரையேசிரேஷ்ட பாதுகாவலராகக் கொண்டிருக்கலாமெனவத்திக்கான் அண்மையில் விதித்திருக்கின்றது. இவ்விதி பலதேசங்களைப்பாதிக்கின்றது. போத்துக்கால் தேசத்துக்கு ஐந்து பாதுகாவல் புனிதருளர். கனடா, இத்தாலி முதலிய பலதேசங்களுக்கு இருவர் உளர். பாப்பரசர் இவ்விதியை இற்றைக்கு ஒருவருடத்துக்குமுன் கொடுத்திருந்த போதிலும் இதை 1976ஆம் ஆண்டுக்குமுன் அமுல்நடத்த வேண்டுமெனக் குறிப்பிட்டிருக்கின்றுர்.

## பிரபல படம்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

12ஆம் பத்திநாத பாப்பானவரின் கிரீடதாரண வைபவத்தைப் பிரதிமைப்படம் பிடிப்பதே இவருக்கு அதிகம் கஷ்டத்தை உண்டுபண்ணியது. ஏனெனில், திறந்த வெளிப்புறக் காட்சிகளைப் படம்பிடிக்க இவர் சம்பேதுருவானவர் சதுக்கத்திலிருந்து வேலைசெய்யவேண்டியிருந்தார். ஆனல் அருளப்ப இன்றைய சின்னப்ப பாப்பரசர்கள் இருவரும் தூண்களின் வரிசை உச்சஸ்தானத்திலிருந்து படம்பிடிக்க அனுமதித்தார்கள்

அமலமரி தியாகிகளின் (ஓ. எம். ஐ.) சபையிற் சேர விரும்புவோர் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியுடன் உடனே தொடர்பு கொள்ளுங்கள்.

புனித சூசையப்பர் அ. ம. தி. குருமடம்,
கொழும்புத்துறை.

## நிறத்திமிரை கிறிஸ்தவர் எதிர்க்கவேண்டும்

"நிறத்தோலுடையவர்கள் கீழ்ப்பட்டவர்கள் எனச் சில தேசங்கள் கொண்டுள்ள அபிப்பிராயத்தை உலகிலுள்ள கிறிஸ்தவர்கள் யாவரும் ஒருமித்து எதிர்த்து அகற்றிவிட வேண்டும்"

என ஆங்கிலநாட்டுக் கத்தோலிக்க மேற்றிராணியார் வீலர் அடிகளார் சென்ற வாரம் ஆங்கில பத்திரிகை ஒன்றில் விளக்கியிருக்கிறுர். தேவனது சமுகத்தில் யாவரும் சமமானவர் என்ற அடிப்படையில் ஒழுகுவதே நீதியும் நியாயமுமாகுமென எடுத்துக்காட்டி, பிற இனங்களை ஒதுக்குவதால் ஓர் இனத்துக்கு என்னநன்மை வந்தபொழுதிலும், அதுபாவமான கருமமென அவர்விளக்கினுர்.

## சமயப்பற்றே மனத்திருப்தி அளிக்கும்

சென்றவாரம் பரி. தந்தை தமது கோடைகால வாசஸ்தலமாகிய கஸ்ரல் கான்டல்பாவில் அளித்த பேட்டியில் மக்களுக்கு முழுதும் திருப்தி அளிக்கக்கூடியது ஒன்றேயொன்று உண்டு என்றும் அதுதான் சமயப்பற்று என்றும் எடுத்து விளக்கினுர். சமயப்பற்று இல்லாவாழ்வை திசையில்லாப் பிரயாணத்துக்கு ஒப்பிட்டு அதனுல் நோக்கம் பூர்த்தியாகாது என்றுர் பரி. தந்தை. சமயப்பற்று இல்லாவிடில் தேவனுக்குக் கொடுக்க வேண்டிய இடத்தை அற்ப பொருள்களுக்குக்கொடுத்து வாழ்வை அவமாக்குகின்ருேம் என்பதே பரி. தந்தையின் பேச்சின் சாரமாம்.

## ரொடிசியாவில் தீவிரம் குறைகின்றதா?

புதிய நிலக்கொள்கைத் திட்டம் அமுல் நடத்துவதில் ரொடிசிய அரசாங்கம் அத்தேச திருச்சபையின் வேண்டுகோளுக்கு ஓரளவு இணக்கம் காண்பித் திருப்பதாகத் தோற்றுகின்றது. முன் வெளிப்படுத்தியது போல் அமுல்நடத்துவதானுல் கிறிஸ்தவ சபைகள்யாவும் தாம் நடத்தும் சமூகசேவைகளை, விசேஷமாகப் பள்ளிக்கூடங்களை அரசாங்கம் கேட்டது போல் பதிவுசெய்துகொள்ள முடியாதிருப்பதை அரசாங்கத்துக்கு எடுத்துக் காட்டியிருந்தன. அதன்பின் நிலைமையைப் பிரதமர் அயன் சிமித் நன்கு சிந்தித்து, தன் கொள்கையிலுள்ள தீவிர குறைகளை உணர்ந்துகொண்டார்போலும்.

## தான் அறியாத பாப்பரசரைச் சந்தித்தார் வால்ஷ் அடிகளார்

சீனுதேசத்தில் 12வருடகாலமாக சிறையிலிருந்து அண்மையில் விடுதலை பெற்ற அமெரிக்க மேற்றிராணியார் வால்ஷ் அடிகளார் ஹொங்கோங் தீவிலுள்ள வைத்தியசாலையிலிருந்து வத்திக்கான் கொண்டு செல்லப்பட்டு சென்றமாதம் 25-ம் திகதி முதன்முதலாக பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசரைச்சந்தித்தார். தற்போது ஆளும் பாப்பரசர் 6-வது சின்னப்பர்என வால்ஷ் அடிகளார் சீனுவில் கைதியாயிருக்கும் போது அவருக்குத் தெரியாது. 2-ம் வத்திக்கான் சங்கத்தைப்பற்றியும அவர் கேள்விப்பட்டதில்லை. திருச்சபையில் நடந்தேறிய மாற்றங்கள் யாவற்றைப் பற்றியும் அவர் ஹொங்கோங் தீவிலேயே அறிந்துகொண்டார். தற்போது வால்ஷ் அடிகளாரின் வயது 79. இவரை ரோமாபுரியில் சந்திப்பதற்காக இவரது இரு சகோதரிகளும் அமெரிக்காவிலிருந்து ரோமாபுரிக்குவந்திருந்தனர்.

## புனிதர்கள் புத்தகங்கள்

| | ரூ. | ச. |
|---|---|---|
| கோடி அற்புதர் அம்மானை | 1-00 | |
| அந்தோனியார் சத்துரு சங்கார மாலை | 2-00 | |
| யூதாததேயு மன்றாட்டுப் பிரார்த்தனை | | 25 |
| நடுத்தீர்வை உலா | | 65 |

ஒவ்வொரு புத்தகத்திற்கும் தபாற்கூலி 10சதம். தபாற்கூலி சேர்த்து அனுப்பாத ஆடர்கள் கவனிக்கப்பட மாட்டாது.

எஸ். எம். இன்னுசிமுத்து உபதேசியார்,
சென் தோமஸ்வீதி, மாதகல், P. O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி

### புரட்டாதி — 1970

| | | | |
|---|---|---|---|
| 20 | ஞாயிறு | வருடத்தின் 25-ம் ஞாயிறு | [ப] |
| 21 | திங்கள் | புனித மத்தேயு | [சி] |
| 22 | செவ்வாய் | தினப்பூசை | [ப] |
| 23 | புதன் | ,, | [ப] |
| 24 | வியாழன் | ,, | [ப] |
| 25 | வெள்ளி | ,, | [ப] |
| 26 | சனி | ,, | [ப] |

## *சத்தியவேத பாதுகாவலன்*

# கண்டனம் நன்மை பயக்குமா?

நாம் விரும்பினும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, எமது செயல்களையும், எம்மையும், பிறர் அவதானிக்கின்றனர். தீர்ப்பு வழங்குகின்றனர். அத்தீர்ப்பை வார்த்தைகளால் வெளியிடுகின்றனர். செயலற்றிருப்பவரைவிட, பலவித முயற்சிகளிலும், பணிகளிலும், ஈடுபட்டிருப்போரைப்பற்றிக் கூடிய கண்டனங்கள் வெளிப்படுவது இயற்கை. இக்கண்டனங்களைக் கண்டு கோபப்படுவது மனித சுபாவம். நாம் பாடுபட்டு ஒரு காரியத்தைச் செய்யும்போது பிறர் வாளா இருந்து, அதிற் பிழைகண்டு பிடிப்பதை நாம் விரும்பமாட்டோம். ஆயினும், ஒரு கண்டனம் நாம் இன்னும் திருந்த வேண்டும் என்ற நல்ல நோக்குடன் செய்யப்பட்டாலும், எம்மைத் தாழ்த்த வேண்டும் என்ற தீய நோக்குடன் செய்யப்பட்டாலும், அதையிட்டுக் கோபப்படுவது அறிவுடைமையாகாது. "எச்சொல் யார் யார்வாய்க் கேட்பினும் அச்சொல் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றார் மெய்ப்புலவர்.

யாரிடமிருந்தாவது எந்த விஷயத்தையும் கற்கும் ஆவல் எமக்கிருக்க வேண்டும். மிகவும் கீழான பாமரனும் சில விடயங்களில் எம்மைவிட அறிவு வாய்ந்தவனாக இருக்கக்கூடும். முக்கியமாக எம்மைப்பற்றிய உண்மைகளைப் பிறரே புலப்படுத்தக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அவை பெரும்பாலும் எமது கண்களுக்குத் தோன்றுவதில்லை. எம்மையும், எமது வாழ்வையும், தொழிலையும் பற்றிய எந்தக் கருத்தையும் நாம் வரவேற்க வேண்டும். அவை உண்மையாக இருக்கலாம். அல்லது அதற்கு மாறாக இருக்கலாம். நல்லெண்ணத்தால் தூண்டப்பட்டதாயிருக்கலாம். அல்லது தீயஎண்ணத்தால் தூண்டப்பட்டதாயிருக்கலாம். அது எம் சுயகௌரவத்தைத்தாக்கி எம்மைத் தாழ்வுபடுத்தலாம். அது வெளியிடப்பட்ட விதம் எம்மனதைப் புண்படுத்தலாம். ஆயினும், சினம் கொள்ளாது, கண்டனத்தின் உணர்ச்சிகளை, அதிற் கையாளப்பட்டுள்ள வார்த்தைகளை ஊடுருவி அதில் வெளிப்படும் கருத்தைச் சீர்தூக்கிப் பார்ப்பது அவசியமாகும். அப்போது எம்மில் அழகற்ற பண்புகள் காணப்படுவதாக உணர்ந்தால் அவற்றைக் களைந்து எம் குறைபாடுகளைத் திருத்த முயலல் வேண்டும். பொய்யான குற்றச்சாட்டுகள் கூட இவ்விதத்தில் சில சமயம் பயன்படக்கூடும். ஆனால் ஒன்று— பிறர் கூறும் கண்டனத்தால் நாம் மனம் சோர்ந்து செயலற்றுப் போகக்கூடாது. நன்மையான காரியங்களை ஆரம்பிப்பவர் பலர் இவ்விதமாக உலக அபிப்பிராயத்துக்கு அஞ்சித் தம் முயற்சியைக் கைவிடுவதாலேயே தீமை ஓங்குகிறது. எனவே, பிறர் அபிப்பிராயங்களை ஏற்பதில், அல்லது ஒதுக்குவதில் நேர்மையான எமது அறிவே உரைகல்லாக இருக்க வேண்டும்.

# பாப்பரசரும் பாதிரிமாரும்

சின்னப்ப பாப்பரசர் அன்று வியாழக்கிழமை அமெரிக்க மெதடிஸ்ற் சபைப் பாதிரிமார் 40பேரைக் கொண்ட குழுஒன்றை வத்திக்கான் மாளிகையில் வரவேற்றார். இவர்களெல்லாம் பரிசுத்த நாட்டைத் தரிசித்துக் கொண்டு திரும்பியவர்கள், அத்தருணம் பரிசுத்தபிதா பேசியபோது, பொறுமை, தாழ்மை, நம்பிக்கை அயராமுயற்சியுடன் கிறிஸ்தவ ஐக்கியத்தின் இலக்கைத் துரந்து செல்ல வேண்டுமெனக் கூறினார். வத்திக்கான் சங்கபிரகடனத்தையும் அப்பொழுது அவர் ஞாபகத்தில் கொண்டுவந்து, உண்மையான கிறிஸ்தவ ஐக்கியம் உள்ளாந்தரங்க மனமாற்றத்தால் மட்டும் வரமுடியுமென்றும் தெரிவித்து நின்றார்.

# கம்யூனிஸ்த ஆட்சி நடைபெறும் கத்தோலிக்க நாடு

கம்யூனிஸ்தஆட்சி நடைபெற்றுவரும்கிழக்குஐரோப்பிய நாடுகளில் ஹங்கேரியும் ஒன்றாகும். அங்கே சமீபத்தில் நிகழ்ந்த சம்பவம் ஒன்று எவரையுமே பிரமிக்கச்செய்வதாகும். அதாவது அந்நாட்டிலே கிறிஸ்துசமயம் ஸ்தாபகமான ஆயிரமாம் ஆண்டு நிறைவுவிழாவும், கம்யூனிஸ்த பொதுவுடைமைஆட்சி ஸ்தாபகமான 21ஆம் ஆண்டு நிறைவுவிழாவும் அன்று வியாழக்கிழமை வந்தபோது திருச்சபையும், அரசாங்கமும் ஒன்றுபட்டுத் தலைநகராகிய புடாபெஸ்ற் நகரிலே அவைகளைக் கொண்டாடியமையே. இரண்டாவது உலக யுத்தம் முடிந்தபின் கடந்துபோன காலத்திலே கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் சரித்திரத்தில் ஒரு நாட்டிலுள்ள மக்கள் ஒருங்குசேர்ந்து நடத்திய கொண்டாட்டம் ஒன்றிருந்தால் அஃது இதுவாகும்.

10ஆம் நூற்றாண்டின் அரசரான புனித முடியப்பரே ஹங்கேரிய நாட்டினை அடியிட்டு, அங்கே கிறிஸ்தசமயத்தைப் புகுத்தினார். இவர் கி. பி. 970ஆம் ஆண்டுவரையிலே பிறந்தார். ஹங்கேரிய நாட்டின் பிரதம வீரர்திலகம் இவரே. ஆவணிமாதம் 20ஆம் திகதி பிறந்தார் என்பது சந்தேகத்துக்கிடமானது: ஆனால், அவரின் ஆயிரமாம் ஆண்டு விழாவுக்கு ஒரேயொரு நியாயத்தை முன்னிட்டே அத்திகதி தெரியப்படலாயிற்று. அதாவது, மக்கள் (கம்யூனிஸ்த) குடியரசுநாடாக ஹங்கேரியைப் பிரகடனஞ் செய்த அரசியல் திட்டஅமைப்பின் 21ஆம் ஆண்டு நிறைவுவிழா அன்றுதினமாய் இருந்தமையே. ஆவணிமாதம் 20ஆம் திகதியன்று புனித முடியப்பரின் ஆயிரமாம் ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடுவதற்கு ஹங்கேரிய திருச்சபை சம்மதிக்கவேண்டிய காரணம் என்ன? நாட்டின் பாதுகாவலரான அவரின்பிறந்த பெருநாளாகிய சுபநாள் கம்யூனிஸ்த இராச்சியத்தில் மங்கி மறைந்து போகாது நிலைபெற்றிருக்கச் செய்வதேயாகும்.

அங்கு நாஸ்திகமே இன்னமும் அரசாங்கமதக்கொள்கையாயிருந்த போதிலும் அது நிர்வாகத்தளவில் வத்திக்கானுடன் ஓரளவில் உறவுபூண்டு அதனை எதிர்ப்பதைக் கைவிடுவதில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுந் தானே முதலாவதென்று பெருமையடைகின்றது. அதாவது 1964ஆம் ஆண்டின் பரஸ்பர ஒப்பந்தப்படி, தனது நாட்டிலே வத்திக்கான் புதிய மேற்றிராணிமாரை நியமனஞ் செய்ய அது அனுமதிக்கலாயிற்று. அதுமுதல் ஹங்கேரியில் புதிய அதிமேற்றிராணிமார் மேற்றிராணிமார் அப்போஸ்தலிக்க பரிபாலனர்களை வத்திக்கானே நியமனஞ்செய்து வருகிறது. ஹங்கேரிய மக்களில் 75சதவிகிதமானோர் கத்தோலிக்கரே, அங்குள்ள கத்தோலிக்க ஆலயங்கள் இன்று அதிகம் சிறப்புற்றுத் திகழ்கின்றன; அநேக இல்லங்களின் சுவர்களில் கத்தோலிக்க சின்னங்கள் காட்சியளிக்கின்றன. ஹங்கேரியின் பொருளாதார சீர்திருத்தம் ஒன்று மட்டுமே கிழக்குஐரோப்பிய நாடுகளில் அதிகம் நன்றாக வேலைசெய்கிறதென்று நிபுணர்கள் பலரும் கருதுகிறார்கள். இதனைத் தொடர்ந்து வந்த அரசியல் சீர்திருத்தத்தின் விளைவாக அங்கு இரகசியப்பொலிசாரின் கடுமையான கொடிய கண்காணிப்புத்தளர்ந்துபோக, அதனால் மிகப்பெரும் பான்மையான ஹங்கேரிய மக்கள் அந்நியர்களுடனும்; ஒருவர் மற்றொருவருடனும் இஷ்டம்போல இப்போது சம்பாஷித்து வருகிறார்கள்.

ஆவணிமாதம் 20ஆம் திகதியன்று நடைபெற்ற ஆயிரமாம் ஆண்டு விழாவிலே அந்நாட்டில் கம்யூனிஷம் உண்டானதிலிருந்து புடாபெஸ்ற் நகரில் நிகழ்ந்த மாபெரும் கத்தோலிக்க கொண்டாட்டம் இதுவாகும். முதல்நாள் இரவு அந்நகரிலுள்ள மகா உன்னதமான மத்தியாசின் ஆலயத்திலே — கஸின்ஹில் எனும் குன்றிலுள்ள 700 ஆண்டுகளைக்கண்ட புராதன ஆசனக்கோவிலில் கொண்டாட்டம் பெருமுழக்கமாக ஆரம்பமானது. "புனிதவலது," அதாவது இன்றுவரை அழிவைக்காணாதிருக்கும் புனித முடியப்பரின் வலது திருக்கரம் அப்பொழுது மக்களின் பகிரங்க காட்சிக்கு வைக்கப்பட்டது. கருதினால் மின்ட்செனரி ஆண்டகை ஒருவர் மட்டும் நீங்கலாக ஹங்கேரிய அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார் அனைவரும தவ்வியபூசையின்போது, ஆலயத்தில் சமூகமாயிருந்தார்கள். நகரின் கண்ணுள்ள ஆலயங்களின் மணிகளெல்லாம் ஒருங்கே அடித்து பெரிதும் ஆர்ப்பரித்தன. ஹங்கேரியின் நாமமாத்திரையான திருச்சபை மேலதிகாரியும் 1956-ம் ஆண்டின அரசியற் புரட்சியின்போது புடாபெஸ்ற நகரிலுள்ள அமெரிக்கஸ்தானிகராலயத்தில் அடைக்கலம் புகுந்தவருமான கருதினால் மின்ட்செனரி ஆண்டவர் தம்மைச் சுயமாகவே தேசப்பிரஷ்டஞ் செய்துகொண்டு இன்னமும் அங்கே சேமமாக இருந்துவருகின்றார்.

## 6-ம் சின்னப்ப தந்தையின் பிரயாணங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | பலஸ்தீன யாத்திரை | தை 4—6 | 1964 |
| 2. | பம்பாய் ,, | மார்கழி 2—5 | 1964 |
| 3. | அமெரிக்க ஐக்கிய நாடுகள் நியூயோர்க் யாத்திரை | ஐப்பசி 4 | 1965 |
| 4. | போர்த்துக்கல் பாத்திமா யாத்திரை | வைகாசி 13 | 1967 |
| 5. | எபேசுஸ் — ரேக்கி யாத்திரை | ஆடி 25—26 | 1967 |
| 6. | பொகோட்டா — கொலம்பியா யாத்திரை | ஆவணி 22—24 | 1968 |
| 7. | உகண்டா யாத்திரை | ஆவணி | 1969 |
| 8. | சார்டினியா ,, | சித்திரை 24 | 1970 |
| 9. | சிட்னி ,, | கார்த்திகை 30 | 1970 |

சேகரிப்பு : 'திராட்சையூரான்'

# சாம்பியா தேசத்தில் திருச்சபையின் நிலைமை

ஆபிரிக்க கண்ட சாம்பியா தேசம் இந்நாட்களில் உலக கவனத்துக்கு வந்திருக்கின்றது. மண்டல சார்பற்ற தேசத் தலைவர்கள் அங்கு சென்றவாரம் ஒன்றுகூடுவதன்முன் அப்பகுதியிலுள்ள ஐந்து தேச மேற்றிராணிமார் அத்தேசத்தில் மகாநாடு கூடித் திருச்சபையின் பிரச்சினைகளை ஆராய்ந்துள்ளனர், சாம்பியா தேசத்தில் உள்ள 5,054000 மக்கள் தொகையில், சுமார் 728,960 பேர் கத்தோலிக்கர். பத்து வருடங்களில் நூறாயிரத்தினால் தொகை கூடியிருக்கின்றது. லுசாக்காநகரில் 16சதவீதம் மக்கள் கத்தோலிக்கர். சாம்பியாவிலுள்ள குருமாரின் தொகை 432, இவருள் 56 பேர் சுதேசிகள். அங்குள்ள 604 கன்னியாஸ்திரிகளுள் 163 பேர் சுதேசிகள். 174 சந்நியாச சகோதரருள் 12 பேர் சுதேசிகள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. சீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1970ஆம் ஆ. புரட்டாதி 19ஆம் உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி : "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி : 300 தாபிதம் 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org